National University Hospital

**Source:** Tamil Murasu, Page 7
**Date:** 8 December 2023

# இயந்திரவியல் சிகிச்சை அளித்த புது நம்பிக்கை

**அனுஷா செல்வமணி**



மருத்துவர்கள் இருவர் மற்றும் மனைவி அறிவுநிலாவுடன் இருக்கும் திரு காத்தவராயன் தினகரன் (அமர்ந்திருப்பவர்)
**படம்: தேசிய பல்கலைக்கழக மருத்துவமனை**

சிறுநீர்ப் பாதையில் பிரச்சினையை எதிர்நோக்கி வந்த காத்தவராயன் தினகரன், 46, புதிய இயந்திரவியல் சிகிச்சை மூலம் பலனடைந்து உடல் நலத்துடன் காணப்படுகிறார்.

பல காலமாக தனது உடலின் வலது பக்கத்தில் தாங்கமுடியாத வலியை அனுபவித்த அவருக்கு சிறுநீரகத்தில் கல்லும் சிறுநீர்ப் பாதையில் நோய்த்தொற்றும் கண்டறியப்பட்டன. அதன் காரணமாக அவரது சிறுநீரகச் செயல்பாடும் நாளுக்கு நாள் குன்றத் தொடங்கியது.

தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையின் சிறுநீரகவியல் மருத்துவர்கள் இருவர், திரு தினகரனுக்கு ஏற்பட்ட நோயைக் குணப்படுத்த புதிய முயற்சியைக் கையாண்டு, சென்ற ஆண்டு அவரை வெற்றிகரமாகக் காப்பாற்றியுள்ளனர்.

வழக்கமாக சிறுநீரகத்தில் இதுபோன்ற பிரச்சினை ஏற்பட்டால், மருத்துவர்கள் திறந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். அதில் வயிற்றுப் பகுதியை வெட்டி, அடைப்பை அகற்றி, சிறுநீர்ப் பாதையை சிறுநீரகத்துடன் இணைக்க வேண்டும்.

ஆனால், திரு தினகரனின் மருத்துவர்கள் குறைவான வலியை ஏற்படுத்தும் மற்றும் நேரத்தை மிச்சப்படுத்தும் சிகிச்சை முறையை முதல்முறையாக மேற்கொண்டனர்.

அதில் மருத்துவர்கள் ‘டா வின்சி’ எனும் அறுவை சிகிச்சை இயந்திரத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

திரு தினகரனின் சிறுநீர்ப் பாதை முதலில் வெட்டப்பட்டது. பின்னர், ‘புக்கால் மியூகோஸா’ எனப்படும் அவரது வாயின் உட்புற திசுக்களை எடுத்து சிறுநீர்ப் பாதையில் பொருத்தப்பட்டது.

அறுவை சிகிச்சை இயந்திரம் அந்த சிகிச்சை முறையை மேற்கொண்டிருந்தாலும் மருத்துவர்கள் இருவரின் கட்டுப்பாட்டில் அது செய்யப்பட்டது.

பொதுவாக ஆறு மணி நேரம் செய்யப்படும் அறுவை சிகிச்சை, திரு தினகரனுக்கு நான்கு மணி நேரத்திலேயே முடிந்தது.

திரு தினகரனுக்கு, பிறக்கும் போதே அந்நோய் கண்டறியப்பட்டு அவருக்கு 21 வயதில் ஏற்கெனவே அதற்காக இந்தியாவில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. வேலைக்காக 200lல் சிங்கப்பூருக்கு வந்த திரு தினகரன், 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அந்நோய் தனக்கு ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை.

ஈராண்டுகளுக்கு முன்பு அறிகுறிகள் மீண்டும் தென்பட, தேசிய பல்கலைக்கழக மருத்துவமனைக்கு அவர் சென்றார். அங்கு அவருக்கு இயந்திரவியல் சிகிச்சை செய்ய முடிவெடுக்கப்பட்டது.

புது சிகிச்சை பற்றி முதலில் திரு தினகரன் கேள்விப்பட்ட போது, “நான் இதுவரை இயந்திரவியல் சிகிச்சை பற்றி அறிந்ததில்லை. மருத்துவர்கள் விளக்கியபோது நான் மிகவும் தயக்கமாகவும் நம்பிக்கை குறைவாகவும் இருந்தேன்.

“மருத்துவர்கள் முதல்முறையாக அதை மேற்கொள்வதால் எனக்குப் பதற்றமாக இருந்தது,” என்றார் .

இன்று அந்த சிகிச்சை முடிந்து ஓராண்டுக்குமேல் ஆகிவிட்டது. தற்போது உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும் திரு தினகரன், “மிகவும் மன நிறைவாக உள்ளது. மருத்துவர்கள் என்னைக் கண்ணும் கருத்துமாக நம்பிக்கை அளிக்கும் விதத்தில் பார்த்துக்கொண்டனர்,” என இன்முகத்துடன் கூறினார்.

திரு தினகரனின் மனைவி அறிவுநிலா, “சிங்கப்பூரில் மருத்துவர்களைப் பார்த்த பிறகு மற்றொரு சிகிச்சையை மேற்கொண்டு அது பலனளிக்காத போது எங்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

“கணவரின் நோய் எப்போது குணமாகும் என்று நாங்கள் நினைக்காத தருணமே இல்லை. இன்று மிகவும் நிம்மதியாக உள்ளது,” என்றார்.

sanush@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited.
Permission required for reproduction